2008 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்களுடைய உறுதியளிப்பைச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அவர்கள் விரும்புகிற வகையில் வெகுவிரைவிலே அந்தக் குளத்தைச் சீரமைப்பதற்கான திருப்பணிக் குழு அமைத்துத் தரப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

18—

பள்ளிக் கட்டடம்

***29165—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் திட்டம் 10-ல் விதிகளுக்குட்பட்டு கூடுதலாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நபார்டு திட்டத்தின்மூலமாக, கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்று கூறினார்கள். போதிய கட்டடம் அங்கே இருக்கிறது. இருந்தாலும், அந்தப் பகுதியிலே 1,300 குழந்தைகளுக்குமேல் படிக்கிறார்கள். அங்கு பெண்களுக்கு, ஆண்களுக்கென்று கழிப்பிட வசதி போதுமானதாக இல்லை.

S.S.A. திட்டத்தில் 20 ஆயிரம் ரூபாய்க்குக் கட்டக்கூடிய அந்த மதிப்பீடு போதாது. ஆகவே, அந்த இடத்திலே புதிதாக பெண்கள் கழிப்பிடம் கட்டுவதற்கும், அதேபோல, முன்பு கட்டப்பட்ட சுற்றுச்சுவர் பழுதடைந்துள்ளது. அதையும் புதுப்பிக்கக்கூடிய வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொண்டு, அதேபோல, உடுமலை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே தற்போது S.S.A. திட்டத்தின்மூலமாகக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. 12 வகுப்பறைகள் கொண்ட கட்டடம். அது பழமையான பள்ளி. அங்கே இன்னும் 12 வகுப்பறைகள் கட்டப்பட வேண்டும். அதற்கும் அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதேபோல, அங்கேயுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலே 3 ஆயிரம் குழந்தைகள் படிக்கிறார்கள். அங்கும் போதிய வகுப்பறைகள், கட்டடங்கள் இருக்கின்றன. இருந்தாலும் கழிப்பிட வசதி போதுமானதாக இல்லை. பெண்கள் அதிகமாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே போதிய கழிப்பிடம் இல்லாத இடங்களுக்கு முன்னுரிமை அளித்து பெண்கள் கழிப்பிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு நல்கி அந்தக் கட்டடம் கட்டுவதற்கு உரிய ஏற்பாடு செய்து தர வேண்டும்.

முற்பகல் 10-20

அதேபோல, உடுமலையிலே Library இருக்கிறது. நாராயணக் கவி மண்டபம் இருக்கிறது. அங்கு I.A.S., I.P.S. படிக்கக்கூடியவர்களுக்கு வேண்டிய புத்தகங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் அங்கு கட்டட வசதி போதாது. அந்த இடத்திலும் புதிதாக கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த கொமரலிங்கம் பள்ளியிலே, இப்பொழுது 15 வகுப்பறைகளுக்கான மங்களூர் ஓடுவேய்ந்த ஒரு கட்டடம் இருக்கிறது. அது ஒரு பழமையான கட்டடமாக இருக்கிறது. எனவே, அதனை மாற்றிவிட்டு நபார்டு வங்கித் திட்டத்தின்மூலமாக அங்கே 16 வகுப்பறைகள் கொண்ட கான்கிரீட் வகுப்பறைகளைக் கட்டுவதற்கு இப்பொழுது நாங்கள் திட்டத்தை வகுத்திருக்கிறோம். அவர் குறிப்பிட்டதைப் போல, 2003-2004 ஆம்

ஆண்டுகளில் அங்கே அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் கழிப்பறை வசதி செய்யப்பட்டிருந்தாலும்கூட, அங்கே படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கைக்குரிய அளவிற்கு அங்கே கழிப்பறைகள் இல்லை. என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. பொதுவாக அவர் சொல்லியிருக்கக்கூடிய உடுமலை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்குக்கூட நான் நேரடியாக ஒரு முறை சென்று பார்த்தேன். அங்கே இருக்கக்கூடிய பழைய கட்டடங்களை மாற்றிவிட்டு, புதிய கட்டடங்களை அமைக்கக்கூடிய முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறோம். கழிவறைகளைப் பொறுத்தமட்டும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலே அதற்கான அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். மூன்று ஆண்டுகளுக்குள் முழுமையாக அத்தனை பள்ளிகளிலும், மகளிர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு, உயர்நிலைப் பள்ளிகளுக்கு, முக்கியத்துவம் கொடுத்து அந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்கள். எனவே, அவற்றைப் படிப்படியாக நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

நூலகம் குறித்து அவர்கள் தெரிவித்தார்கள். நிச்சயமாக கிளை நூலகமாக இருந்தால், நான் அதிகாரிகளை அழைத்து பேசி, நூலக நிதியின்மூலமாக அந்தக் கட்டடங்களை உருவாக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அமராவதி நகர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுத்தார்கள். ஏற்கெனவே உடுமலை நகரத்திலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய ராஜேந்திரா நகர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரக் கேட்டிருந்தேன். அது விடுபட்டுப் போய்விட்டது. வருகிற நிதியாண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு முன்னுரிமை அளித்து அதைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, உடுமலை நகராட்சியிலே கணக்கம்பாளையம் ஆரம்பப் பள்ளி இருக்கிறது. அதனையும் நடுநிலைப் பள்ளியாக உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதியில் உள்ளதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஒரே ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு எங்கேயெல்லாமோ சுற்றிச் சுற்றி வருகிறீர்களே?

திரு. சி. சண்முகவேலு: இல்லை, இது முழுவதும் அதையொட்டி வருகிறது. அதேபோல, சோழமாதேவி, முஸ்லீம்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதி. அங்கு நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அதையும் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கேள்விக்கு அப்பாற்பட்ட ஒரு பிரச்சினை. என்னுடைய உடுமலை வட்டமானது கோவை மாவட்டத்திலே இருக்க வேண்டும், திருப்பூர் மாவட்டத்திலே இருக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கேள்வியின் முதல் பகுதிக்கு மாத்திரம் பதில் அளிக்க விரும்புகிறேன். அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த மேல்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட வேண்டும், உயர்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கருத்துருக்கள் அரசிடம் பரிசீலனையில் இருக்கின்றன. கடந்த ஆண்டே ராஜேந்திரா நகர் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனால், பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளைக் கருத்திலே கொள்கிறபோது, அமராவதி பள்ளிக்குக் கொடுக்கப்பட இருக்கிறது. ஆனால், ராஜேந்திரா நகருக்கு கொடுக்க இயலவில்லை. வரக்கூடிய ஆண்டுகளில் நிச்சயமாக அவற்றை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யும். அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய கணக்கம்பாளையம் பள்ளி, அதேபோல, சோழமாதேவி பள்ளி அதையொட்டி இருக்கக்கூடிய பகுதிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய பகுதிகளாகும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அவற்றையும் அரசு நிச்சயமாக கனிவோடு கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி. நகர் தொகுதியில் அசோக் நகர் புதூரில் இருக்கிற மேல்நிலைப் பள்ளி இரு பாலரும் படிக்கிற பள்ளி. அந்தப் பள்ளியிலே சில சமூகவிரோதிகள் உள்ளே புகுகிற அளவிற்கு காம்பவுண்டு சுவர்

2008 நவம்பர் 12]

உள்ளது. நல்ல முறையிலே இல்லை. இருக்கிற காம்பவுண்டு சுவர் பழுதடைந்து போய் இருக்கிறது. அதைப்போல கழிப்பிட வசதியும் இல்லை. இருபாலரும் படிக்கின்ற பள்ளி என்றாலும் கழிப்பிட வசதி அங்கு இல்லை. அதுபோல, கணினி போன்ற கருவிகளையெல்லாம் வைப்பதற்குத் தேவையான அறையும் அங்கே சரியான முறையில் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, சென்னையிலே மைதானம் அமைவது என்பது மிகப் பெரிய சிரமம். அந்தப் பள்ளியிலே மிகப் பெரிய விளையாட்டு மைதானம் இருக்கிறது. ஆனால், புதர் மண்டிப் போய் இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் நேரடியாக ஆய்வு செய்து, அந்தப் பள்ளிக்குத் தேவையான அனைத்துத் தேவைகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற இந்த நேரத்தில், அது அதிகமான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் படிக்கிற பள்ளி என்பதையும் குறிப்பிட நான் விரும்புகிறேன். அதற்கான பதிலைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசோக் நகர் பள்ளி சென்னையில் இருக்கக்கூடிய பள்ளிகளிலே ஒரு முக்கியமான பள்ளி என்பதை நான் அறிவேன். அந்தப் பள்ளிக்கும் நான் சென்று வந்திருக்கின்றேன். அந்தப் பள்ளியிலே இருக்கக்கூடிய காம்பவுண்டு சுவர் பழுதடைந்திருந்தால் நிச்சயமாக அவற்றிற்கு அரசினுடைய சார்பில் சீரமைக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்காக ஒதுக்கீடுகள் செய்வார்களானால் அதுவும் அரசுக்கு உதவிகரமாக அமையும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். விளையாட்டு மைதானங்கள், அதுபோல, அவர் சொல்லி இருக்கக்கூடிய கழிப்பறைகள், கணினிகளை முறையாக வைக்கக்கூடிய அறை வசதி ஆகியவற்றையும் கவனித்து நிச்சயமாக அவற்றுக்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய முயற்சியால் பல்வேறு அரசு

[2008 நவம்பர் 12

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் நடுநிலை, தொடக்கப் பள்ளிகளுக்கு மத்திய அரசினுடைய நபார்டு திட்டம் மற்றும் அனைவருக்கும் கல்வித் திட்டங்களில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அப்படிக் கட்டப்படுகின்ற அந்தக் கட்டடங்களுக்கு, அப்பகுதி இருக்கின்ற தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினருடைய பரிந்துரையுடன் அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு முன்வர வேண்டுமாய் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். காரணம், தொடக்கப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் ஓரளவுக்கு வகுப்பறைகள் இருக்கின்ற கட்டடங்களுக்கே திரும்பவும், நம்முடைய அதிகாரிகள் பல குக்கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டு அதற்கு பட்டியலில் முன்னுரிமை கொடுப்பதற்குப் பதிலாக சில இடங்களைத் தேர்வு செய்து, அந்த வாய்ப்பைத் தந்துவிடுகிறார்கள். உண்மையிலேயே இன்னும் மரத்தடி நிழல்களில் அல்லது ஒதுக்குப்புறங்களில், காம்பவுண்டு சுவர்களையொட்டி வகுப்பறைகள் நடந்துகொண்டிருக்கிற பள்ளிகளுக்கு அந்தக் கட்டடங்கள் நியாயமாகச் சென்று சேர்வதற்கான வாய்ப்புகள் இல்லாத காரணத்தால், எதிர்வரும் காலங்களில் இந்தக் குழுக்கள், அத்தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினருடைய ஆலோசனையுடன் முன்னுரிமை அடிப்படையில் இதுபோன்ற கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு முன்வருமா என்பதையும், அதுபோல என்னுடைய தொகுதியில் உள்ள மருங்கூர், சிறுகிராமம், நான் படித்த குள்ளஞ்சாவடி அரசு உயர்நிலைப் பள்ளி, கட்டியங்குப்பம் போன்ற பள்ளிகளுக்கு இதுவரையில் எந்தவொரு கட்டட வசதியும் இல்லாமல் இன்னமும் மரத்தடிகளில் பல வகுப்புகள் நடந்தேறி வருகின்றன. அவற்றுக்கெல்லாம் முன்னுரிமை அடிப்படையில், வருங்காலங்களில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று இருக்கக்கூடிய இந்த இரண்டாண்டு காலத்தில்தான் தமிழகத்திலே அமைந்திருக்கக்கூடிய பல்வேறு பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளுக்கெல்லாம் நபார்டு வங்கியினுடைய உதவியை, சிறப்பாக

2008 நவம்பர் 12]

7-வது திட்ட காலத்தில் ஏறத்தாழ 58 பள்ளிகளுக்கு 131 கோடி ரூபாய், 8-வது திட்டத்தின்கீழ் 59 பள்ளிகளுக்கு 67 கோடி ரூபாய், இப்போது 9-வது திட்டத்தின்கீழ் 362 பள்ளிகளுக்கு 410 கோடி ரூபாய் பெற்று இருக்கிறோம். அதற்கு அரசினுடைய நிர்வாக அனுமதியை எதிர்பார்த்து இருக்கிறோம். இத்தனை பள்ளிகளுக்கும் வழங்கி இருக்கக்கூடிய ஓர் ஆட்சி நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதவிர, அரசினுடைய தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தமாத்திரத்தில் நீங்கள் எடுத்துக்கொள்வீர்கள் என்று சொன்னால், 2006-2007 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு, அந்தப் பள்ளிகளுக்கெல்லாம், 'அனைவருக்கும் கல்வி' திட்டத்தின்கீழ் நம்முடைய மாநில அரசினுடைய பங்களிப்போடு இணைந்து ரூ.330.59 கோடி பெறப்பட்டுள்ளது. இதுவரை 'அனைவருக்கும் கல்வி' திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டதிலேயே மிக அதிகமாக தொகை பெற்றுத் தந்த முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2007-2008-லே ரூ.185.69 கோடி, இந்த ஆண்டு 2008-2009-லே ரூ.298 கோடிக்குக் கட்டடப் பணிகள் மாத்திரம் வகுப்பறைகளுக்காக நடைபெறுகின்றன. அவற்றைத் தேர்ந்தெடுக்கின்றபோது அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலை, எத்தனை பேர் படிக்கிறார்கள், படிக்கக்கூடிய குழந்தைகளுக்கேற்ப வகுப்பறைகள் ஆகியவை குறித்து அரசு அதிகாரிகள் தீர்மானிக்கிறார்கள். அவர் குறிப்பிடுவதைப்போல, ஓரிரு இடங்களிலே அதிகாரிகள் மெத்தனப் போக்கைக் கையாண்டு இருந்தால், நிச்சயமாக நான் அவற்றைக் கவனிக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலே உள்ள சில ஊர்களைக்கூட குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் அவற்றைக் குறிப்பிட்டு எனக்கு எழுதித் தந்தால் அந்தப் பள்ளிகளையும் இணைத்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். காரணம், நிறைய கட்டடங்களுக்குக் கொடுப்பதற்காக நிதி வசதியை நாம் உருவாக்கித் தந்திருக்கிறோம். கட்டடங்களுக்கான போதிய நிதி வசதி இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், எங்களுடைய பகுதியிலே இந்தந்தப் பள்ளிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் அந்தத் தகவல்களை எனக்கு அளித்தால் நிச்சயமாக அவற்றிற்கு முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

வினா எண் 19, திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

19—

பாலம்

***7265—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே வள்ளக்கடவு என்ற இடத்தில் பாலம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருக்கக்கூடியது இது. திக்குறிச்சி என்னும் இடத்தில் வள்ளக்கடவு பகுதியில் இந்தப் பாலம் தேவைப்படுகின்றது. சிவாலயக் கோயிலான திக்குறிச்சி மகாதேவர் கோயிலில் சிவாலயத் திருவிழாவின்போது இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்லும் பகுதி அது. உலகப் புகழ் பெற்ற சிதறால் ஜெயின் மலைக் கோயிலும் இங்கு இருக்கின்றது. இதனால் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் 12 கி.மீ. சுற்றி வருவதை மாற்றி, 5 கி.மீ. தொலைவில் பயணிக்க முடியும். கடந்த 2007 ஆம் ஆண்டு இந்தப் பாலத்திற்கான மதிப்பீடு